செய்தி வெளியீடு எண்: 187 நாள்: 13.03.2018

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தலைமையிலான அரசின் சாதனைகளை மக்களிடையே கொண்டு செல்லும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி) பணி ஆய்வுக் கூட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி வகுப்பில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள் ஆற்றிய உரை**

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள்(செய்தி)–க்கான பணி ஆய்வுக் கூட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி வகுப்பு சென்னை, கலைவாணர் அரங்கிலுள்ள கூட்ட அரங்கில் இன்று (13.3.2018) நடைபெற்றது.

இப்பணி ஆய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்துள்ள அனைத்து உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களையும் (செய்தி) வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மாவட்டத்தில் எத்தனை துறைகள் இருந்தாலும், அவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தக்கூடிய ஒரே துறை செய்தி மக்கள் தொடர்புத் துறை தான். ஒரு துறையின் இயக்கம் சரியாக இருந்தால்தான், அந்தத் துறையின் செயல்பாடு நன்றாக இருக்கும். அது திரைப்படத் துறையாக இருந்தாலும் சரி, நாடகத் துறையாக இருந்தாலும் சரி, அத்தனைக்கும் பொருந்தும் வகையில் நமது துறை சரியான பாதையில்தான் செல்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திய எண்ணற்ற திட்டங்களை மக்களுக்கு கொண்டு சென்றதோடு, மக்கள் அதனை நன்றாக பயன்பெற்றதில் பெரும்பங்கு செய்தித்துறை வகித்தது. இது அனைத்து தரப்பு மக்களாலும் பாராட்டப்பட்டது. குறிப்பாக, பாரத ரத்னா புரட்சித்தலைவர்

டாக்டர் எம்.ஜி.ஆர்.நூற்றாண்டு விழா 30 மாவட்டங்களில் நமது துறையின் சார்பில் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது.

இன்று காலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து, வரும் 23–ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை விழா நடத்துவது குறித்து கலந்தாலோசித்து வந்தேன். அப்போது, செய்தி மக்கள் தொடர்புத் துறைக்கான பணி ஆய்வு மற்றும் புத்தாக்கப் பயிற்சி வகுப்பு நடந்து வருவது குறித்தும், அதில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.நூற்றாண்டு விழாவில் சிறப்பாக பணியாற்றிய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தேன். அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்ததோடு, இன்று உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)–களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்குமாறு தெரிவித்தார். உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி) மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களோடு இணைந்து பணியாற்றி அவர்களுக்கு உறுதுணையாக செயல்பட வேண்டும். பத்திரிகையில் வரும் எதிர்மறையான செய்திகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் மூலம் விளக்கம் பெற்று சரியான செய்திகளை வெளியிட உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள்(செய்தி) நடவடிக்கை எடுக்க வேண்டும். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் இல்லாத தருணங்களில் பணி தொய்வின்றி நடைபெற, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி) தங்களை தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரசின் சாதனைகளைப் பற்றியும், திட்டங்களைப் பற்றியும் செய்தியாளர் சுற்றுப்பயணம் மேற்கொள்வதோடு, வெற்றிக் கதைகள் தயாரித்து நாளிதழ்களில் வெளியிட முனைப்புடன் செயல்பட வேண்டும்.

திரையரங்குகளில் அரசின் செய்திப் படங்கள் வெளியிடப்படுவதை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.

முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களிடம் நேரில் சந்தித்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஒரே வெளியீடான தமிழரசு இதழுக்கு அதிக அளவு சந்தா சேர்க்கவேண்டும்.

மேலும், உங்கள் பணிக்குத் தேவையான அத்தனை அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

எனவே, உங்கள் பணியின் முக்கியத்துவத்தை அறிந்து, அனைவரும் முழு முயற்சியுடன் செயல்பட்டு அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களுக்கு கொண்டு செல்வதில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு நமது துறைக்கு பெருமை சேர்க்க வேண்டும். இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையும், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையும் ஆற்றினார்கள். இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு.எஸ்.பி.எழிலழகன் அவர்கள், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. உல.ரவீந்திரன், இணை இயக்குநர்கள் திருமதி பி.சாந்தி, திரு. க.சண்முகசுந்தரம், திரு. மு.பா.அன்புச்சோழன், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அனைத்து உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி) மற்றும் பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**